# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

**********

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),

**********

முறையீட்டு மனு எண்.151/2019/பே.1
ஆணை நாள்: 26 .02.2020.

| | |
|---|---|
| 02.10.2019 நாளிட்ட "தினகரன் " நாளிதழ் செய்தி. | -- இம்முறைமன்ற நடுவம் தாமாக முன்வந்து வழக்காக பதிவு செய்தது |
| செயல் அலுவலர், இளையான்குடி பேரூராட்சி, சிவகங்கை மாவட்டம். | –– எதிர் மனுதாரர். |

ஆணை.

02.10.2019 நாளிட்ட "தினகரன்" நாளிதழ் செய்தியில், சிவகங்கை மாவட்டம், இளையான்குடி பேரூராட்சி தொடர்பாக வரப்பெற்ற செய்தியினை, இம்முறைமன்ற நடுவம் 2014–ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம், பிரிவு 7(i) ன்படி தாமாக முன் வந்து வழக்காக பதிவு செய்து, முறையீட்டு மனு எண். 151/2019 என எண்ணிடப்பட்டது. முறையீட்டு மனு மீதான விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டும், அறிக்கைகள் பெறப்பட்டும், உரியவாறு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

02.20.2019 நாளிட்ட " தினகரன் " நாளிதழ் செய்தியில், சிவகங்கை மாவட்டம், இளையான்குடி பேரூராட்சியில் பல்வேறு பணிகளுக்கு போலி பட்டியல்கள் தயாரித்தல், வீடுகளுக்கு குடிநீர் இணைப்புகள் வழங்கியது ஆகிய பல்வேறு முறைகேடுகள் நடைபெற்றுள்ளதாகவும் புகார்கள் தெரிவித்தும், பேரூராட்சி அலுவலகத்தில் உள்ள ஒரு ஊழியர் அனைத்து அலுவலர்களையும் மிரட்டுவதாகவும், மோசடியில் ஈடுபடுவதாகவும் முறைகேடு புகார்கள் தெரிவித்து செய்தி வெளியிடப்பட்டுள்ளது.

18.11.2019 நாளிட்ட சிவகங்கை மாவட்டம், இளையான்குடி பேரூராட்சி செயல் அலுவலரின் விளக்க அறிக்கையில் இளையான்குடி பேரூராட்சியின் மொத்த மக்கட்தொகை 24,767 எனவும், இப்பேரூராட்சியில் நாள் ஒன்றுக்கு காவேரி கூட்டு குடிநீர்த்திட்டத்தின் மூலம் 11 லட்சம் லிட்டர், மற்றும் பேரூராட்சியில் உள்ள 53 சின்டெக்ஸ் தொட்டிகள் மூலம் 6.65 லட்சம் லிட்டர் குடிநீர் வழங்கப்பட்டு வருவதாகவும், பேரூராட்சியில் 2,534 வீட்டு குடிநீர் இணைப்புகளும், 55 பொது குடிநீர் இணைப்புகளும் வழங்கப்பட்டு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருவதாகவும், ஒவ்வொரு வீட்டு குடி நீர் இணைப்பிற்கும் அதற்கான வைப்புத் தொகை வரைவோலை மூலம் பெறப்பட்டு சம்பந்தப்பட்ட அலுவலர் மூலம் உரிய பதிவுகள் மேற்கொள்ளப்பட்டு, குடிநீர் இணைப்புகள் வழங்கப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பேரூராட்சி மூலம் கொள்முதல் செய்யப்படும் அனைத்து உபகரணங்கள் மற்றும் பொருட்கள் யாவும் அங்கீகரிக்கப்பட்ட நிறுவங்களிடமிருந்து வரப்பெற்ற விலைப்புள்ளிகளின் அடிப்படையில் உரிய மன்ற

தீர்மானம் பெறப்பட்டு வாங்கப்படுவதாகவும், வாங்கப்படும் பொருட்களுக்கான பட்டியல் தொகை பேரூராட்சிகளின் உதவி இயக்குநரின் அனுமதி மற்றும் மேலொப்பம் பெறப்பட்டு சம்பந்தப்பட்ட நிறுவனத்திற்கு கோடிட்ட காசோலை மூலம் தொகை வழங்கப்படுவதாகவும், செலவினப் பட்டியல்கள் அனைத்தும் முறையாக பராமரிக்கப்பட்டு மன்ற அனுமதி பெறப்பட்டு தணிக்கைத் துறைக்கு அனுப்பப்பட்டு வருவதாகவும், திட்டப் பணிகள் அனைத்திற்கும், துறை தொடர்பான பொறியாளர்களால் உரிய மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, அனைத்துப் பணிகள் குறித்தும் உரிய அளவீட்டு புத்தகங்களில் பதிவுகள் செய்யப்பட்டு உரிய அலுவலரின் மேலொப்பம் பெறப்பட்ட பின்னர் சம்பந்தப்பட்ட ஒப்பந்தக்காரருக்கு கோடிட்ட காசோலை மூலம் தொகை வழங்கப்படுவதாகவும் உறுதி செய்து நாளிதழில் வெளியான செய்தி உண்மைக்கு புறம்பானது என பேரூராட்சி செயல் அலுவலர் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

31.01.2020 நாளிட்ட அழைப்பாணையின்படி இம்முறைமன்ற நடுவத்தில் 19.02.2020 அன்று ஆஜரான இளையான்குடி பேரூராட்சி செயல் அலுவலரிடம், தினகரன் நாளிதழில் தெரிவித்துள்ளவாறு பணியாளர் ஒருவர் முறைகேடுகளில் ஈடுபடுகிறாரா, அவ்வாறெனில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் விவரமென்ன என முறைமன்ற நடுவத்தால் கோரப்பட்டபோது, இளையான்குடி பேரூராட்சி மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி காவலர் திரு.முனியாண்டி என்பவர் முறைகேடாக பேரூராட்சி செயல் அலுவலரின் கவனத்திற்கே கொண்டு வராமல் சில குடிநீர் இணைப்புகள் வழங்கியுள்ளதாகவும், இவைகள் கண்டறியப்பட்டு மேற்படி பணியாளர் 13.01.2020 அன்று முதல் தற்காலிக பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளதாகவும், மற்றபடி பேரூராட்சியில் எந்த விதி மீறல்களும் இல்லை எனவும் தெரிவித்துள்ளார். மேலும் இளையான்குடி பேரூராட்சியில் தான் செயல் அலுவலராக பணியேற்ற பின்னர் 148 குடிநீர் இணைப்புகள் முறைகேடாக பெறப்பட்டுள்ளது கண்டறியப்பட்டதாகவும், இவ்விணைப்புகள் முறைப்படுத்தப்பட்டால் பேரூராட்சிக்கு ரூ.14.80 லட்சம் வருவாய் கிடைக்கும் எனவும், இது தொடர்பாக பேரூராட்சிகளின் இயக்குநருக்கு கருத்துரு சமர்ப்பித்துள்ளதாகவும், கடந்த இரண்டு ஆண்டுகளாக விதிகளுக்கு புறம்பாக குடிநீர் இணைப்புகள் பூமிக்கு அடியில் குழாய் பதித்து கொடுத்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

தற்போது சில பயனாளிகள் உரிய அனுமதியின்றி பேரூராட்சி குடிநீர் திட்டப் பணியாளர் திரு.முனியாண்டி என்பவர் சட்டத்திற்கு புறம்பாக அனுமதி வழங்கியதை ஒப்புக்கொண்டு கடிதம் வழங்கியுள்ளதாகவும், இது தொடர்பாக சம்பந்தப்பட்ட அனைவருக்கும் கடிதம் வழங்கப்பட்டுள்ளதாகவும், முறைகேடாக இணைப்பு பெற்றதாக 9 நபர்கள் மட்டுமே கடிதம் வழங்கியுள்ளதாகவும், மற்ற நபர்கள் கடிதம் வழங்க மறுத்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார். பேரூராட்சியில் உள்ள மேல் நிலை நீர்த்தேக்கத் தொட்டியிலிருந்து குழாய்கள் பதித்து, அனுமதி பெறாத குடிநீர் இணைப்புகளை முறைப்படுத்துவதின் மூலம் பேரூராட்சியின் வருவாய் இழப்பினை தவிர்க்கப்படலாம் எனவும், பேரூராட்சியின் மக்கட்தொகையில் பெரும்பாலானோர் இஸ்லாமிய சமுதாயத்தைச் சார்ந்தவர்கள் என்பதால் அனுமதியற்ற இணைப்பினை துண்டிப்பது என்பது நிர்வாகத்திற்கு ஒரு சவாலாக இருக்கும் என்பதால் நடைமுறையில் செயல்படுத்தக்கூடிய அளவில் ஆணையிடும் பட்சத்தில் சட்டத்திற்கு புறம்பான இணைப்புகளை முறைப்படுத்துவதின் மூலம் பேரூராட்சிக்கு வருவாய் ஏற்படும் என தனது வாக்கு மூலத்தில் இளையான்குடி பேரூராட்சி செயல் அலுவலர் தெரிவித்துள்ளார்.

இளையான்குடி பேரூராட்சி செயல் அலுவலர் தனது வாக்குமூலத்துடன் சமர்ப்பித்துள்ள 19.02.2020 நாளிட்ட விளக்க அறிக்கையில், தினகரன் நாளிதழ் செய்தி தொடர்பாக சிவகங்கை மண்டல பேரூராட்சிகளின் 16.12.2019 நாளிட்ட சிவகங்கை மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநரின் அறிவிப்பின்படி இளையான்குடி பேரூராட்சி, மற்றும் இதர பேரூராட்சிகளின் 11 அலுவலர்களால் குடிநீர் கணக்கெடுப்பு தொடர்பான பணிகள் 17.12.2019 முதல் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் உரிய பதிவேடுகள் மற்றும் பதிவுகளின்படி முறையற்ற வகையில் குடிநீர் இணைப்பு பெற்றவர்கள், ஒரு இணைப்புக்கு பணம் செலுத்தி கூடுதலாக மற்றொரு இணைப்பு பெற்றவர்கள், எவ்வித விண்ணப்பமோ அலுவலக அனுமதியோ இன்றி இணைப்பு எடுத்துள்ளவர்கள் என மொத்தம் 148 அனுமதியற்ற குடிநீர் இணைப்புகள் உள்ளதாக கண்டறியப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், கள ஆய்வின்போது பேரூராட்சி மூலம் வழங்கப்பட்ட ஒரு குடிநீர் இணைப்பானது இரண்டு அல்லது மூன்று இணைப்புகளாக பிரிக்கப்பட்டு அதில் கேட் வால்வு பொருத்தியும் தரைமட்டத் தொட்டி மற்றும் மின் மோட்டார் அமைத்தும் குடிநீர்

உறிஞ்சப்படுவதாகவும், அனுமதிக்கப்பட்ட குடிநீர் இணைப்பு 2,534ல், 90 சதவீதம் நபர்கள் அனுபவித்து வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மின் மோட்டார்கள் வீட்டின் உட்புறம் அமைக்கப்பட்டு அதற்கான பைப்புகள் பூமிக்கடியில் செல்வதால் இதனை முழுமையாக ஆய்வு மேற்கொள்ள இணைப்பு எடுத்துள்ளவர்கள் ஒத்துழைப்பு அளிக்கவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக அனுமதியற்ற குடிநீர் இணைப்பு வழங்கிய பேரூராட்சி குடிநீர் திட்டப் பணியாளர் திரு.க.முனியாண்டி (மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி காவலர்) 13.01.2020 முதல் தற்காலிக பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளதாகவும், அனுமதியற்ற குடிநீர் இணைப்புகளை துண்டிப்பதற்கு தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நேர்வில் இளையான்குடி பேரூராட்சி செயல் அலுவலரின் விளக்க அறிக்கை, வாக்குமூலம் மற்றும் கூடுதல் அறிக்கை ஆகியன பரிசீலிக்கப்பட்டன. இளையான்குடி பேரூராட்சியில் அனுமதியின்றி குடிநீர் இணைப்பு வழங்கப்பட்டதாக இணைப்பு எடுத்த நபர்களே சம்பந்தப்பட்ட குடிநீர் பணியாளர் திரு.முனியாண்டி என்பவர் இவ்வாறான முறைகேடான குடிநீர் இணைப்பு வழங்க பணம் பெற்றது தொடர்பாக புகார் கொடுத்துள்ள நிலையில், அவர் மீது காவல்துறையில் புகார் அளித்து குற்றவியல் நடவடிக்கை மேற்கொள்ளவும் பேரூராட்சி செயல் அலுவலருக்கு ஆணையிடப்படுகிறது. மேலும் இப்பேரூராட்சியில் அனுமதியற்ற குடிநீர் இணைப்புகள்148 எண்ணிக்கையினை முறைப்படுத்தும் விதமாக பேரூராட்சிகளின் இயக்குநருக்கு கருத்துரு அனுப்பி வைக்கப்பட்டதாக பேரூராட்சி செயல் அலுவலரால் தெரிவிக்கப்பட்டுள்ளதையும், இவ்விணைப்புகளை முறைப்படுத்துவதின் மூலம் பேரூராட்சிக்கு ரூ.14.80 லட்சம் வைப்பு நிதியாகவும், மேலும் மாதாந்திர குடிநீர் கட்டணம் மூலம் நிரந்தர வருவாய் ஏற்படுமென்பதையும் கருத்தில் கொண்டு விதிகளின்படி உரிய ஆணை பிறப்பிக்க பேரூராட்சிகளின் இயக்குநருக்கு பரிந்துரைத்து அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

2020–ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 26 –ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

–//ஒப்பம்//–
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

உள்ளாட்சி அமைப்புகள் ... சென்னை–600 032

–//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//–

செயலாளர் 27.2.20

27.2.2020

27/2/2020

பெறுநர்

1.செயல் அலுவலர்,
இளையான்குடி பேரூராட்சி,
சிவகங்கை மாவட்டம்.

2. பேரூராட்சிகளின் இயக்குநர்,
பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
ராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை–28.

3.பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்,
சிவகங்கை மண்டலம்,
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
சிவகங்கை.

நகல்

மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களின் தனி எழுத்தர்
முறைமன்ற நடுவ செயலரின் தனி எழுத்தர்.
உதவிப் பிரிவு அலுவலர் (ஊராட்சிகள்)